# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly தமிழ் மாத இதழ்

மலர் : 7 இதழ்: 4 ஜனவரி : 2023 ரூ.20/-
Volume: 7 Issue: 4 January : 2023 Rs.20/-



## SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



# அஷ்டோத்ர ஸத சுக்ர வார ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**17வது பாராயணம் - 02.12.2022 வெள்ளிக்கிழமை**
**அருள்மிகு ஸ்ரீ பாலமுருகன் திருக்கோயில்**
அண்ணா நகர் மேற்கு, சென்னை - 40.

**18வது பாராயணம் - 09.12.2022 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ ருக்மாயி சமேத ஸ்ரீபாண்டுரங்க ஸ்வாமி கோயில்**
65/28, காவரை தெரு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை - 15.

**19வது பாராயணம் - 16.12.2022 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ பிடாரி பொன்னியம்மன் திருக்கோயில்**
ஏழுமலை சரவை, நன்மங்கலம், சென்னை - 129.

**20வது பாராயணம் - 23.12.2022 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ கருமாரியம்மன் திருக்கோயில்**
சுதர்சன் நகர் பஸ் ஸ்டாப், மாடம்பாக்கம், சென்னை - 26.

**21வது பாராயணம் - 30.12.2022 வெள்ளிக்கிழமை**
**அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயில்**
லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை - 114.

**தொடர்ந்து 108 கோவில்களில் பிரதி வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயண வைபவத்தில் நாமும் பங்கு பெறுவோம்.**

**மேலும் தொடர்புக்கு : 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்



காயத்ரீ தேவி

வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம். மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 41

**யந்மநஸா ந மநுதே யநாஹுர் மநோமதம்/**

**ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதம் உபாஸதே//**

**- கேநோபநிஷந்**

**பொருள் :** *எதை மனதினால் தெரிந்து கொள்ள முடியாதோ, எதனால் மனம் அறியப்படுகிறதோ, அதையே நீ ப்ரம்மம் என்று அறிவாயாக. "இது இன்னது'' என்று உபாஸனை செய்யக் கூடியது பரப்ரம்மம் அல்ல. மனதிற்கு அதிதேவதை சந்திரன். மனதினால் மனிதன் உலகம் முழுவதையும் தெரிந்து கொள்ள முடியும். மனதினால் முடியாதது எதுவுமில்லை. ஆனால் இந்த மனம் ப்ரத்யகாத்மனை அதாவது உள்ளிருக்கும் ஆத்மாவை மட்டும் அறிவதில் ஸமர்த்தன் அல்லன். இந்த மனதையே அந்த ஆத்மாதான் ப்ரகாசிக்கிறான்.*

*மனதிற்கு ஸாக்ஷியாக இருக்கக் கூடிய இவனையே "நான்'' என்று தெரிந்து கொள்ள வேண்டும்*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||*

**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 7 இதழ்: 4

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231

## புத்தகத்தின் உள்ளே

| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு... | 5 |
| தை மாத விசேஷங்கள் | 7 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 11 |
| ஸ்ரீமத் பாகவதம் | 13 |
| ஸ்ரீ ஆதிசங்கரர் | 15 |
| தெரிந்து கொள்வோம் | 18 |
| அறுபத்தி மூன்று நாயன்மார்கள் | 19 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 21 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 22 |
| தர்மத்தின் குரல் | 23 |
| ஔவையார் | 26 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 31 |
| சாதனைப்பறவைகள் | 36 |
| யானை | 39 |
| தருவின் நிழலில் | 42 |
| இராமாயணம் காட்டும் பாதை | 46 |
| மனம் தரும் தனம் | 48 |

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**D. சூரியநாராயணன்**
**Cell : 98841 05302**
**R. வெங்கட்ராமன்**
**Cell : 94434 95950**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# ஒரு நிமிடம் உங்களோடு...

## 55. புறம் பேசாமை

இரண்டு நண்பர்களோ, அல்லது இரண்டு உறவினர்களோ கூடிப் பேசும்போது அங்கு இல்லாத மூன்றாவது நபர் ஒருவருடைய குற்றம் குறைகளைப் பற்றி பேசுவதுதான் **"புறங்கூறல்".** இது பெரும்பாலும் தவிர்க்க முடியாததாக ஆகிவிட்டது.

மூன்றாவது நபர் ஒருவரைப் பற்றி பேசும்போது அவருடைய நல்ல குணங்களைப் பற்றி பேசலாம். அவருடைய குற்றம் குறைகளை அவரிடமே நேரில் கூறலாம். ஆனால் அவர் இல்லாதபோது பேசினால் அது பகையையும் பிரிவினைகளையும் உருவாக்கும்.

புறம் பேசுவதற்கு சில முக்கிய காரணங்கள் உண்டு. அவை...

**1. எரிச்சல் :** ஒருவர் தெரிந்தோ தெரியாமலோ ஒருவருக்கு தவறிழைத்துவிட்டால் அதை மறந்து அவரை மன்னிக்காமல் அவர் இழைத்த தவறைப் பற்றியே பேசுவார்கள். அப்படி பேசினால் தனக்கு மன திருப்தியை ஏற்படுத்தும் என்று நினைப்பார்கள்.

**2. பொறாமை :** ஒருவருடைய வெற்றிகளையும், புகழ்களையும் பார்த்து ஏங்குவார்கள். அந்த பொறாமைகள் காரணமாக அந்த மூன்றாவது நபரிடம் குற்றம் குறைகளைக் கண்டுபிடித்து அதை மற்றவர்களிடம் பேசுவார்கள்.

**3. அற்ப சந்தோஷம் :** ஒரு சிலர் மூன்றாவது நபரின் குறைகளை கேலியாக பேசி மற்றவர்களைச் சிரிக்கவைத்து அற்ப சந்தோஷம் அடைவார்கள்.

**4. தற்பெருமை :** தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்று தன்னைப் பற்றி மிக உயர்வாக எண்ணிக்கொண்டு அடுத்தவர்களைப் பற்றி மட்டம்தட்டி பேசுவார்கள்.

புறங்கூறாமைக்காக, வள்ளுவர் **"புறங்கூறாமை"** என்றஒரு அதிகாரத்தையே திருக்குறளில் அளித்துள்ளார்.

**அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே**
**பிறனழீஇப் பொய்த்து நகை. (குறள் 19-182)**

**பொருள் :** ஒருவன் இல்லாதபோது அவனைப் புறங்கூறி அவனைக் கண்டவிடத்துப் பொய்யாக அவனைப் புகழ்தல், அறத்தைக் கெடுத்துப் பாவம் செய்வதைவிடத் தீயது.

16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ சமயப் பற்றுள்ள "உலகநாத பண்டிதர்" என்பவர் "உலகநீதி" என்றநூலில் "ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்" என்று கூறியுள்ளார்.

அடுத்தவர்களைப்பற்றி புறம் பேசுவதற்கு முன் நாம் 100% குறைகளற்றவர்களாக இருக்கிறோமா? என்று பார்த்துக்கொள்ள வேண்டும்.

இந்த நல்ல விஷயத்தை எல்லோரும் கடைபிடிக்க வேண்டும்.

**D. சூரியநாராயணன்**


**வேதபாரதி செய்திகள்**

**வாசகர்கள், கட்டுரையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும்**

**இனிய ஆங்கில புத்தாண்டு**
**மற்றும்**
**பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

## சுபக்ருது வருஷம் - தை மாத விசேஷங்கள்

**(ஜனவரி 15.01.2023 முதல் பிப்ரவரி 12.02.2023 வரை)**

| | | | |
|---|---|---|---|
| *15.01.2023* | தை 1 | ஞாயிறு | உத்திராயன புண்ய காலம் பொங்கல் பண்டிகை |
| *16.01.2023* | தை 2 | திங்கள் | மாட்டுப்பொங்கல் |
| *18.01.2023* | தை 4 | புதன் | ஏகாதசி |
| *19.01.2023* | தை 5 | வியாழன் | பிரதோஷம் |
| *21.01.2023* | தை 7 | சனி | அமாவாஸை |
| *25.01.2023* | தை 11 | புதன் | சதுர்த்தி |
| *27.01.2023* | தை 13 | வெள்ளி | சஷ்டி |
| *28.01.2023* | தை 14 | சனி | ரதசப்தமீ |
| *29.01.2023* | தை 15 | ஞாயிறு | பீஷ்மாஷ்டமீ |
| *01.02.2023* | தை 18 | புதன் | ஏகாதசி |
| *03.02.2023* | தை 20 | வெள்ளி | பிரதோஷம் |
| *04.02.2023* | தை 21 | சனி | சதுர்த்தசி / தைப்பூசம் |
| *05.02.2023* | தை 22 | ஞாயிறு | பவுர்ணமி |
| *09.02.2023* | தை 26 | வியாழன் | சதுர்த்தி |
| *11.02.2023* | தை 28 | சனி | சஷ்டி |

## 21.01.2023 சனிக்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ சுபகிருது நாம ஸம்வத்ஸரே உத்தராயனே ஹேமந்த ருதௌ, மகர மாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து ஸ்திர வாஸர யுக்தாயாம் உத்ராஷாட நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

## அட்டைப்பட விளக்கம்

## ஸ்ரீ தியாகராஜர் ஆராதனை

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், தியாகராஜ ஸ்வாமிகள் மற்றும் ஸ்யாமா ஸாஸ்திரிகள் ஆகிய மூவரையும் **"ஸங்கீத மும்மூர்த்திகள்"** என்று அழைப்பார்கள். இம்மூவரும் பிறந்த ஊர் **"திருவாரூர்".**

திருவாரூரில் வாழ்ந்துவந்த ராம பக்தரான ராமபிரம்மம் என்பவருக்கும் சீதாம்மாவுக்கும் மூன்றாவது மகனாக 04.05.1767 அன்று பிறந்தவர்தான் தியாகராஜ ஸ்வாமிகள்.

தியாகராஜனுக்கு அவரது தந்தையார் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளைக் கற்பித்தார். தாயாரிடம் ஜெயதேவரது அஷ்டபதி, ராமதாஸர் கீர்த்தனைகள் மற்றும் பக்திபாடல்களைக் கற்றுக்கொண்டார். தியாகராஜரின் 8ஆவது வயதில் அவருக்கு உபநயனம் செய்விக்கப்பட்டது. அதே நேரத்தில் அவரது தந்தை குரு உபதேசமாக **"ஸ்ரீராம"** நாம உபதேசமும் செய்வித்து தான் பூஜித்துவந்த ஸ்ரீராம, லக்ஷ்மண, சீதா, அனுமன் விக்ரகங்களையும் கொடுத்து பூஜை செய்யச் சொன்னார். அது முதல் ஸ்ரீ தியாகராஜர் அந்த விக்ரகங்களுக்கு உளப்பூர்வமாக, உணர்ச்சி பூர்வமாக நித்திய பூஜை செய்துவந்தார்.

18-வது வயதில் தியாகராஜருக்கு **"பார்வதி"** என்னும் பெண்ணுடன் திருமணம் நடந்தது.

ஸ்ரீராமக்ருஷ்ண யதீந்த்ரர் என்னும் மஹான் இவருக்கு **"ஸ்ரீராம"** தாரக மந்த்ரத்தை உபதேசித்து 96-கோடி ஜபம் செய்யுமாறு அருளினார். அதேபோல் தினமும் 1,25,000 வீதம் 96 கோடி நாமாக்களை 21 வருடங்களில் ஜபித்து முடித்ததும் ஸ்ரீராமபிரான் தியாகராஜருக்கு காட்சி கொடுத்ததாகக் கூறுகிறார்கள்.

ஸங்கீத ஸ்ருதி ஆதாரங்களைக் கொண்ட பாடல்களை இயற்றிப் பாட ஆரம்பித்தார். இவரது பெயரும் புகழும் நாடு முழுவதும் பரவத் தொடங்கியது. இவரது பெருமையைக் கேட்ட தஞ்சை சரபோஜி ராஜா தன்னைப் புகழ்ந்து பாடி இவரை ஆஸ்தான வித்வானாக இருக்க அழைத்தார். ஆனால் தியாகராஜர் ராஜ சேவை செய்வதைவிட ராம சேவை செய்வதையே விரும்பினார்.

ஒரு சமயம் தியாகராஜரின் அண்ணன் தியாகராஜரைக் கொடுமைப்படுத்தி அவர் பூஜித்துவந்த ஸ்ரீராம விக்ரஹங்களை காவேரி வெள்ளத்தில் வீசி எறிந்துவிட்டார். தியாகராஜர் எங்கு தேடியும் விக்ரஹங்கள் கிடைக்கவில்லையே என்று அழுது புலம்பி தவிக்க ராமரை நினைத்து **“நே நெந்துவெத குதுரா”** என்றகீர்த்தனைகள் எழுதி பாட ஸ்ரீராமபிரான் தியாகராஜரின் கனவில் தோன்றி தான் இருக்கும் இடத்தை கூற, இவரும் அதை எடுத்து மீண்டும் பிரதிஷ்டை செய்து பூஜிக்கத் தொடங்கினார்.

தியாகராஜர் தம் வாழ்நாளில் அறுபத்து நான்காயிரம் கீர்த்தனங்களுக்கும் மேலாக பாடியுள்ளார். திருப்பதியில் ஸ்ரீஸ்ரீநிவாஸன் இவரது கீர்த்தனத்திற்கு திரையை விலக்கிக்கொண்டு செவி சாய்த்தார் என்று கூறுவார்கள்.

கடைசி காலத்தில் தியாகராஜன் ஸ்ரீபிரம்மானந்த ஸ்வாமிகள் என்பவரை வரவழைத்து அவரிடம் **“ஆபத் ஸன்யாசம்”** வாங்கிக்கொண்டு 1847 ஆம் ஆண்டு ஜனவரி 6-ம் தேதி தை மாதம் பகுள பஞ்சமி திதியில் தம்முடைய 80ஆவது வயதில், ஸ்ரீராமரின் திருவடிகளை அடைந்து முக்தி பெற்றார். தியாகய்யரின் சீடர்கள் அவருடைய திவ்ய சரீரத்தை

காவிரி நதிக்கரையில் அவரது குரு ஸொண்டி வெங்கட்ரமணய்யா சமாதி அருகில் துளசி பிருந்தாவனம் அமைத்தார்கள்.

தியாகப்பிரம்மம் என்று அழைக்கப்படும் தியாகராஜரின் ஆராதனை தினம் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் உலகெங்கும் உள்ள இசைக் கலைஞர்கள், இசைப் பிரியர்கள் திருவையாற்றில் இருக்கும் அவருடைய அதிஷ்டானம் முன் பஞ்சரத்ன கீர்த்தனங்களை சேர்ந்து பாடி அவருக்கு அஞ்சலி செலுத்துகிறார்கள். கடந்த 175 வருடங்களாக இது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த வருடம் அவருடைய 176-ஆவது ஆராதனை நாள் 11.01.2023 புதன் அன்று நடைபெறவுள்ளது. அன்றைய தினம் நாமும் ஸ்ரீ தியாகராஜரையும் அவர் ஆராதித்த ஸ்ரீஸீதாராமரையும் நமஸ்கரித்து ப்ரார்த்திப்போம்.


**D. சூரியநாராயணன்**


99940 89133



99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 45

## அத்தியாயம் – 2
## "ஸாங்கிய யோகம்"

**யததோ ஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபஸ்சித:/**
**இந்த்[3]ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸப[4]ம் மந://** **(கீதை 2-60)**

**பொருள் :** பற்று அழியாததால் கலக்குபவையான புலன்கள் முயற்சியுள்ள புத்திசாலியான மனிதனின் மனத்தைக்கூட பலவந்தமாக இழுத்துச் சென்றுவிடுகின்றன.

**விளக்கம் :** பகவான் அர்ஜுனனை **"கௌந்தேய"** = குந்தியின் மகனே என்று அழைக்கிறார். இந்திரியங்கள் பொல்லாதவைகள். இந்திரியங்கள் அலையக்கூடியவை. ஒருவன் எவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டாலும் இந்தப் பொல்லாத புலன்கள் அவனுடைய உள்ளத்தை இழுத்துச் சென்றுவிடும்.

கடுமையான தவமும், யோகப் பயிற்சியும் கொண்டு புலனடக்கத்திற்கு முயற்சி செய்து கொண்டிருந்த, பக்குவப்பட்ட யோகியும், சிறந்த முனிவருமான விஸ்வாமித்திரரே மேனகையின் ஆட்டத்திற்கு மயங்கிவிட்டார். உலக சரித்திரத்தில் இது போன்றபல சம்பவங்கள் உள்ளன. சீரிய புலனடக்கமே மேலான நாகரிகம் என்று கருதப்படுகிறது. இம்மையிலும் மறுமையிலும் மேன்மைக்கு இந்திரிய நிக்கிரகமே உற்றஉபாயம்.

**ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசம் :** விஷப்பாம்புகள் நடமாடும் வீட்டில் வசிப்பவர்கள் எப்போதும் வெகு ஜாக்கிரதையாக இருப்பதுபோல் உலகில் வாழும்

மக்கள் காமத்திற்கும், காசு ஆசைக்கும் உட்படாமல் எப்போதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

அந்த இந்திரியங்களை அடக்கும் வழியை அடுத்த ஸ்லோகத்தில் பகவான் கூறுகிறார்.

**தானி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பர:/**

**வஸே ஹி யஸ்யோந்த்3ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டி2தா//**

**(கீதை 2-61)**

**பொருள் :** புலன்களை அடக்கி உணர்வை என்னிடத்தில் நிறுத்துபவனே நிலைபெற்றஅறிவுடையோனாகிறான்.

**விளக்கம் :** இந்திரியங்களை அடக்கி உலக விஷயங்களிலிருந்து விடுவித்து பகவானையே கருத்தில் கொண்டு மனதை ஒரு நிலைபடுத்தியவனுடைய புத்தி ஸ்திரமான நிலையில் இருக்கும். அவனுடைய ஞானமும் நிலையானதாக இருக்கும்.

ராவணனின் மனைவி **“மண்டோதரி”** அவள் ராவணனிடம் “நீங்கள் ராமனைப் போல் வேஷமிட்டு சீதையிடம் செல்லுங்கள் சீதை உங்களிடம் மயங்குவாள்” என்று கூறினாள். அதற்கு ராவணன் “அட அசடே, நான் ராமன் வேஷம் போட்டால், காமன் என்னைவிட்டுப் போய்விடுவான். பிறகு எனக்கு சீதையிடம் விருப்பமே ஏற்படாது என்றான்.

புலனடக்க முயற்சிகள் நிச்சயம் பலன் தரும். புலனடக்கம் இல்லையேல் நிச்சயம் அழிவுதான்.

**ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம் :**

நெருங்கிய உறவினர் ஒருவர் காலமாகிவிட்டால் அவ்வேளையில் சிற்றின்பத்தைப்பற்றி நினைக்க யாருக்கும் இயலாது. காரணம் மனது முழுவதும் துக்கத்தில் ஈடுபட்டிருக்கும். இதுபோல் மனது முழுவதும் ஈஸ்வரனிடத்தில் ஈடுபடும்போது இந்த்ரிய சுகங்களை நினைக்க முடியாது.

கீதை தொடரும்...

# ஸ்ரீமத் பாகவதம்

*(ஸத்யம் பரம் தீமஹி)*

பரிதி பகுதி - 25

*ஸ்ரீமத் பாகவத்தில் 2ஆவது ஸ்கந்தத்தில் 9ஆவது அத்தியாயத்தில் வரும் சதுஸ்ஸ்லோகி பாகவத ஸ்லோகங்களின் தொடர்ச்சி*

*மூன்றாவது ஸ்லோகம்*

**யதா மஹாந்தி பூதாணி பூதேஷுச்சாவசேஷ்வது:/**
**ப்ரவிஷ்டான்யப்ரவிஷ்டாநி ததா தேஷு தேஷ்வஹம்//**

**(பா 2-9-34)**

**பொருள் :** *ஆகாசம் முதலிய பஞ்ச பூதங்கள் எப்படி எல்லாவற்றிலும் உட்புகுந்தாலும் அவைகளின் இயற்கையை இழப்பதில்லையோ அதுபோல நான் எல்லாவற்றிலும் இருந்தாலும் உண்மையில் அவை என்னிடம் உள்ளன நான் அவற்றில் இல்லை.*

*விளக்கம் : பகவான் எல்லாவற்றிற்குள்ளும் இருந்தாலும் அதைக் கடந்து நிற்கிறான். ஒரு மண் குடத்தின் உள்ளே ஆகாசம் இருக்கிறது. குடத்தின் வெளியேயும் ஆகாசம் இருக்கிறது. அந்த மண் குடத்தை உடைத்துவிடுகிறோம். அப்போது அதன் உள்ளே இருந்த ஆகாசம் எங்கே போயிற்று? ஆகாசம் ஒன்றாகிவிடுகிறது. எல்லா பஞ்சபூதங்களும் ஒரு வரையறைக்குட்பட்டவை அல்ல.*

*கீதையில் இதைத்தான் பகவான் கூறுகிறார்.*

**மயா ததமித$^{3}$ம் ஸர்வம் ஜக$^{3}$த$^{3}$வ்யக்த மூர்த்தினா/**
**மத்ஸ்தா$^{2}$னி ஸர்வபூ$^{4}$தானி ந சாஹம் தேஷ்வவஸ்தி$^{2}$த://**

**(கீதை 9-4)**

**மத்ஸ்தா$^{2}$னி ஸர்வபூ$^{4}$தானி ந சாஹம் தேஷ்வவஸ்தி$^{2}$த://**
*= எல்லாம் என்னிடம் உள்ளன நான் அவைகளிடம் இல்லை.*

*கடைசி நான்காவது ஸ்லோகம் = (பகவான் பிரம்மாவிடம் கூறுகிறார்)*

**ஏதாவதேவ ஜிஜ்ஞாஸ்யம் தத்வ ஜிஜ்ஞாஸுனா ஆத்மன:/**
**அன்வயவ்யதிரேகாப்யாம் யத் ஸ்யாத் ஸர்வத்ர ஸர்வதா//**
**(பா 2-9-35)**

பொருள் : சரியான தத்துவம் என்பது என்ன என்று அறியும் ஆர்வம் உண்டாக வேண்டும். எது எல்லா இடத்திலும் எல்லா காலங்களிலும் மாற்றம் இல்லாமல் இருக்கிறதோ அதுதான் **"பிரம்மம்"**.

**விளக்கம் :** "பிரம்மம்" எல்லா காலத்திலும், எல்லா இடத்திலும் மாற்றம் இல்லாமல் இருக்கும். பிரம்மத்தை அறிந்து கொண்டால் எல்லாவற்றையும் அறிந்துகொண்டதற்கு ஒப்பாகும். ஒருவனுக்கு தத்துவஞானம் வேண்டும் என்றஆசை இருந்தால் அவன் பகவான் ஒருவர்தான் இருக்கிறார் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

**உதாரணம் :** தங்கத்தால் பலவித ஆபரணங்கள் செய்கிறோம். அவைகளுக்கு வளையல், செயின், மோதிரம், காதில் போட்டுக் கொள்ளும் தோடுகள் என்று பல பெயர்கள் சூட்டுகிறோம். அவற்றை குறிப்பாக பெண்கள் அணிந்துகொண்டிருக்கும் போது அதைப் பார்த்து "நீ அழகான செயின் **போட்டுக் கொண்டிருக்கிறாய்,** மோதிரம் போட்டுக் கொண்டிருக்கிறாய், ஜிமிக்கி போட்டுக் கொண்டிருக்கிறாய், என்று தான் சொல்கிறோம். யாரும் "நீ தங்கம் போட்டுக் கொண்டிருக்கிறாய், என்று சொல்லுவது கிடையாது. அதை யாராவது "நீ போட்டிருக்கும் செயின் மாடல் நன்றாக இல்லை" என்றால் உடனே கடைக்குப்போய் அதே தங்கத்தால் வேறு மாடலில் செயின் செய்கிறோம். அப்போது பார்க்கும்போது நன்றாக இருக்கிறது. உண்மையில் தங்கம் மாறவில்லை. அதே தங்கம்தான், மாடல்தான் மாறியிருக்கிறது. நாம ரூபத்தில்தான் மாற்றம். வஸ்துவில் மாற்றம் இல்லை.

பகவான் ஒருவர்தான் என்பதன் உண்மையை உணர்த்துவதுதான் **"ஸதுஸ்ஸ்லோகி"** பாகவதம்.

தொடரும்...

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன் அத்தியாயம் — 5 அவதார மஹிமை பாகம் 16**

## அத்தியாயம் — 5
## ஸந்யாசம்

தண்ணீரில் சல சலப்பு கேட்டதும் நதியில் குளித்துக்கொண்டிருந்த பலரும் **"முதலை முதலை"** என்று கத்திக்கொண்டே கரையை நோக்கி ஓடினார்கள். ஆனால் சங்கரன் ஏதும் அறியாமல் அப்படியே நின்றுகொண்டிருந்தான். உடனே சங்கரனின் நண்பன் விஷ்ணு சங்கரன் கையைப் பிடித்து வேகமாக கரைக்கு இழுத்தான். ஆனால் அதற்கு முன்னால் அந்த முதலை சங்கரனின் காலை கவ்விக்கொண்டது. இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த ஆர்யாம்பாள் **"தேவீ காத்யாயனி!,** இது என்ன சோதனை? ஏற்கனவே என் கணவனை இழந்துவிட்டேன். எனக்கு ஆதரவாக இருந்தது என் மகன் மட்டுமே. அவனையும் நான் இழக்க வேண்டுமா? தேவீ அவனை காப்பாற்று" என்று கத்தினாள். கரையில் இருந்தவர்கள் கற்களாலும் கட்டைகளாலும் முதலையை அடித்தார்கள். எந்த பிரயோஜனமும் இல்லை. அந்த முதலை சங்கரனை நதியின் ஆழமான பகுதிக்கு இழுத்துச் சென்று கொண்டிருந்தது.

அந்த சமயம் சங்கரன் சத்தமாக "அம்மா நீ நினைத்தால் என்னை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றலாம். அம்மா இப்போதாவது எனக்கு ஸன்யாஸத்திற்கு அனுமதி அளியுங்கள். **ஆபத்ஸந்யாஸ**மாவது எடுத்துக்கொள்கிறேன். அப்படி அளித்தால் இந்த முதலை என்னை விட்டுவிடும் என்றான்.

(இப்போதோ அல்லது இன்னும் சிலமணி

நேரத்திலோ மரணம் சம்பவிக்கலாம் என்று இருக்கும்போது குரு இல்லாமலேயே தானே ஸந்நியாசம் மேற்கொள்வது "ஆபத் ஸந்யாசம்")

இதைக் கேட்ட ஆர்யாம்மாள் என்ன செய்வது என்று அறியாமல் "பகவானே விருஷபலேஸ்வர சங்கரன் ஸன்யாசியாக எங்காவது வாழ்ந்தாலும் தீர்க்காயுசோடு இருப்பான் அல்லவா? அப்படியே ஆகட்டும் என்று வேண்டிக்கொண்டு சங்கரனிடம் ஸன்யாசம் மேற்கொள்ள அனுமதி அளித்தாள். என்ன ஆச்சர்யம் அந்த முதலை சங்கரனின் காலை விட்டுவிட்டு அவனிடமிருந்து விலகிவிட்டது.

தாயாரின் சம்மதம் கிடைத்தவுடன் சங்கரன் **"பிரைஷ"** மந்திரத்தைச் சொல்லி தண்ணீரில் முங்கி எழுந்து ஸந்யாஸம் மேற்கொண்டார்.

**("பிரைஷ"** மந்திரத்தின் பொருள் "என்னைக் கண்டால் ஒரு ஜீவராசிக்குகூட பயம் உண்டாகக் கூடாது. சகல ஜீவராசிகளிடமும் நான் அன்பாக இருக்கக்கடவேன்)

சங்கரன் நதியைவிட்டு வெளியே வந்ததும் "சிகாவபனம்'' (மொட்டையடித்தல்) செய்துக் கொண்டு, **"யக்ஞஸுத்திரத்தை"** (பூணுல்) அறுத்துவிட்டு தாயாரை நமஸ்கரித்துவிட்டு "அம்மா, எனக்கு உத்திரவு கொடுங்கள். நான் குருவைத் தேடி போகிறேன்'' என்றான்.

தாய், "மகனே, சங்கரா, வா வீட்டிற்கு போகலாம். நீ இந்த ஊரிலேயே இரு. நான் உன்னை பார்த்துக்கொண்டாவது இருப்பேன், எனக்கு யாரும் துணை இல்லை. நான் இறந்தால் நீதானே கர்மம் செய்ய வேண்டும். என்னுடைய காலம்வரையிலும் நீ என்னுடன் இரு. அதற்கு பிறகு எங்கு வேண்டுமானாலும் போ'' என்றாள்.

"அம்மா, இப்போதுதானே நான் ஸன்யாசியாக அனுமதி கொடுத்தாய். ஸந்யாசிகளுக்கு இந்த உலகம்தான் வீடு. அவர்கள் ஒரே இடத்தில் இருக்கக்கூடாது . நீ பயப்படாதே, நம்முடைய உறவினர்கள் உன்னை நன்றாக பார்த்துக் கொள்வார்கள். நீ என்னை பார்க்க வேண்டும் என்று நினைத்தாலே போதும். நான் ஓடி வந்திடுவேன். உன்னுடைய மரணத்திற்கு பிறகு உனக்குச் செய்ய வேண்டிய ஸம்ஸ்காரங்களை நானே செய்வேன். இது சத்தியம் என்று கூறினான்.

தாய்க்கும், உறவினர்களுக்கும் ஆறுதல் கூறிய சங்கரன் காலடி கிராமத்தை விட்டு தன் குருவைத்தேடி புறப்பட்டான்.

"சங்கரன்" இனி "சங்கரர்"

தொடரும்......


**ஸ்ரீ கோகுல கிருஷ்ணா கோசாலை**

**ஸ்ரீ கிருஷ்ணாமிருதம் பப்ளிக் சாரிடபள் ட்ரஸ்ட்**

(80 G Available)

**756 பசுக்கள் பராமரிப்பு செய்யும் ஸ்தாபனம்**

1. கோ பூஜை செய்ய
2. கோ தானம் செய்ய
3. பசு பராமரிப்பு செய்ய
4. பிதுர்கள் திருப்தி அடைய – (மஹாளய பட்ச காலத்தில்)



பசு பாதுகாப்பு செய்வது கோடிபுண்ணியம்

தொடர்பு : **ஸ்ரீ நடராஜன்**

ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் - 602 023

**8940224744 / 9363111799**

## “தெரிந்து கொள்வோம்”
## 3. ஐந்து பவித்ரமான வஸ்துக்கள்

**உச்சிஷ்டம் சிவ நிர்மால்யம் வமனம் ஸவகர்படம்**
**காகவிஷ்டதே பஞ்சைதே பவித்ராதி மனோஹரா!**

*மேற்கண்ட பாடல் வேதவியாஸரால் மஹாபாரதத்தில் எழுதப்பட்டது. இந்த பாடலின்* **பொருள் :**

1. *உச்சிஷ்டம் = எச்சில்*
2. *சிவ நிர்மால்யம் = சிவபெருமானுக்கு படைத்தவை*
3. *வமனம் = வாந்தி பண்ணி துப்பியது*
4. *ஸவகர்படம் = சவத்தின்மேல் விரிக்கும் போர்வை*
5. *காகவிஷ்டம் = காக்கையின் மலத்திலே விளைந்த ஒன்று*

*அதாவது எச்சில் சிவபெருமானுடைய நிர்மால்யம், வாந்தி எடுத்தது, பிணத்தின் மேல் போர்த்திய துணி, காக்கையின் மலத்தில் விளைந்தது. இந்த ஐந்து பொருட்களும் பவித்திரமானவை என்று வேதவியாஸர் கூறுகிறார்.*

*அவர் கூறிய இந்த ஐந்து பொருட்களும் அனைவராலும் ஒதுக்கிவைக்கப்படுபவை. பின் எப்படி வேதவியாஸர் இவைகளை பவித்திரமான பொருட்கள் என்று கூறினார்? அவர் கூறினால் அதில் தவறு இருக்காது அல்லவா? பின் எப்படி இவற்றை பவித்திரம் என்று கூறினார்?.*

*விடையும் விளக்கமும் அடுத்தமாதம்*

தொகுப்பு : **செங்கதிரோன்**

## அறுபத்தி மூன்று (63) நாயன்மார்கள்

*அருணன்* *3/63*

### 3. இயற்பகை நாயனார்

காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குடியில் பிறந்தவர் **"இயற்பகையார்"** சிவனடியார்களுக்கு சேவை செய்வதையும் அவர்களுக்கு வேண்டியவற்றை இல்லையென்று கொடுப்பதையும் தலைசிறந்த அறமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

அவருடைய பெருமையை உலகிற்கு வெளிப்படுத்த எண்ணிய சிவபெருமான் சிவனடியார்போல் வேடமிட்டு வந்து இயற்பகையாரிடம் "நீர் சிவனடியார்கள் வேண்டுவதை எல்லாம் தட்டாமல் தருவீர் என்று கேள்விபட்டோம். எமக்கு வேண்டியதை உம்மிடம் பெற்றுச் செல்லலாம் என்று வந்தோம்" என்றார். அதற்கு இயற்பகையார் "என்னிடம் உள்ளது எதுவானாலும் தேவரீருக்கு தட்டாமல் தருவேன்"" என்றார். சோதனை செய்ய வந்துள்ள சிவன் "உம்முடைய மனைவியைத் தரவேண்டும் என்றார்.

இதைக்கேட்ட இயற்பகையார் திடுக்கிடவில்லை. உடனே தன் மனைவியை அழைத்து "இன்று உன்னை இவருக்கு கொடுத்துவிட்டேன்" என்று கூறி அவளை அடியாரிடம் ஒப்படைத்து "இன்னும் நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார்.

"உன் ஊர் மக்கள் என்னைத் தாக்க வருகிறார்கள் நான் இந்த ஊரைக் கடந்து செல்லும் வரையில் நீர் துணையாக வரவேண்டும்" என்றார் சிவனடியார் வேடத்தில் வந்த சிவன்.

நாயனார் அடியாரையும் தம் மனைவியையும் முன்னே போகச் செய்து வாளுடன் அவர்கள் பின்னே சென்றார். ஊர் மக்கள் அவரைத் துரத்தி வந்தனர் இயற்பகை நாயனார் அவர்களிடம் சண்டையிட்டு அவர்களை வெட்டிவீழ்த்தினார்.


சற்று தூரம் சென்றதும் நாயனார் "இனி நீங்கள் தைரியமாக போகலாம்" என்று கூறிவிட்டு திரும்பி வந்தார். அப்போது சிவனடியார் நாயனாரின் பெயர் சொல்லி அழைக்க நாயனாரும் திரும்பி பார்த்தார். அங்கு தன் மனைவி மட்டும் நின்றிருந்தார். சிவனடியாரைக் காணவில்லை. ஆனால் சிவபெருமான் ரிஷப வாகனத்தில் தேவியுடன் காட்சி தந்து "இயற்பகையாரே உம்மை சோதிக்கவே யாம் வந்தோம். சிவனடியாரை உபசரிக்கும் உமது பண்பு இந்த உலகம் கண்டு வியக்கக்கூடியது. சிவலோகம் உம்மை வரவேற்கக் காத்திருக்கிறது" என்று கூறி மறைந்தார்.

நாயன்மார்கள் கதை தொடரும்......



# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## பக்தி



மனிதனையே தெய்வமாக நினைத்து அவனுக்குச் சேவை செய்வது சிலாக்கியம்தான். ஆனால் நாம் அப்படி நினைப்பதோடு நிற்காமல் அவனே உண்மையாகத் தன் தெய்வீகத்தைக் கொஞ்சமாவது தெரிந்து கொள்ள நாம் ஆலயங்களை அவசியம் பேண வேண்டும்.

நல்லவனாவதற்குப் பக்தி தேவையில்லை என்று ஒருவாதம். ஆனாலும் நடைமுறையில் பலவிதமான சுயநல ஆசைகளால் ஆட்டி வைக்கப்படுகிறஜீவனைப் பரிசுத்தப்படுத்துவதற்கு பக்தியைப்போன்றசாதனம் வேறு இல்லவே இல்லை. பகவான் என்று ஒருவன் சர்வ சாட்சியாகவும் சர்வசக்தனாகவும் இருந்துகொண்டு நம் கர்மங்களுக்குப் பலன் தருகிறான்' என்கிறபயபக்தி உணர்ச்சிதான் யுக யுகாந்தரமாக மனிதனைத் தர்ம மார்க்கத்தில் நிறுத்துவதற்குப் பெரிய ஊன்றுகோலாக இருந்து வந்திருக்கிறது.

பக்தியின் லட்சியம் நல்லவனாக ஆக்குவது மட்டுமல்ல. நமக்குக் காரணமான சக்தியைத் தெரிந்துகொண்டு, அதற்கும் நமக்கும் பேதமில்லை என்றபரம ஞானத்தை அடைந்து சம்ஸாரச் சுழலிலிருந்தே தப்புவதே பக்தியின் லட்சியம். அதோடு, வெளி உலகத்துக்கு நல்லவனாக நடக்கவும் அதுவே வெறெந்த உபாயத்தையும்விட மிகுந்த சக்தியுடன் உதவி புரிகிறது. கோபுரம் கட்டி எல்லார் கண்களிலும் படவைத்து பகவானை ஞாபகமூட்டுவதைவிடப் பெரிய சமூக சேவை இல்லை.

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

# சுழல்களில் சிக்குண்ட புழு

ஒரு புழு நதியில் விழுந்துவிட்டது. பாய்ந்து வந்த நீரின் ஓட்டம் அதை இழுத்துக் கொண்டு சென்றது.




அப்பொழுது வழியில் இருந்த ஒரு நீர்ச்சுழலில் அது சிக்கிக் கொண்டதால், அங்கேயே வட்டமடித்துக் கொண்டிருந்தது. உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அது எவ்வளவு முயன்றும் அதனால் தப்பிக்க இயலவில்லை. சிறிது நேரத்திற்குப் பின், நீரின் ஓட்டம் திசை மாறியதால் அது சுழலிலிருந்து வெளியே வந்தது. அந்தோ பரிதாபம், “நல்ல வேளையாக சுழலிலிருந்து தப்பித்துவிட்டோம்” என்று அது சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுதே மற்றொரு சுழலில் மாட்டிக் கொண்டது. மறுபடியும் அது நீரோடு வேகமாக சுற்றத் தொடங்கியது. இரண்டாவது சுழலிலிருந்தும் அது ஒரு வழியாக தப்பித்துக் கொண்டு வெளியே வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் அடுத்த சுழலில் விழுந்தது.

அதிர்ஷ்டவசமாக, இரக்க மனம் படைத்த ஒருவன் அப்புழுவின் நிலைமையைப் பார்த்துப் பரிதாபப்பட்டு, புழு இருக்கும் இடத்திற்குச் சென்றான். பக்குவமாக அதைச் சுழலிலிருந்து வெளியே எடுத்தான். பிறகு கரைக்குச் சென்று, நீரில்லாத இடமாகப் பார்த்து, காய்ந்த நிலத்தில் அதை வைத்தான். தகுந்த சமயத்தில் அவன் காப்பாற்றாமல் போயிருந்தால், அப்புழுவின் வாழ்க்கை நீரிலேயே முடிந்து போயிருக்கும்.

தொடரும்...

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஶ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்



*சென்ற மாத தொடர்ச்சி 3-6 : அவர், வ்யாகரணம் பற்றிய மிகச்சிறந்த நூலொன்றை தந்துள்ளார். அதில் அவர் வேதங்களின் அட்டவணை ஒன்றைக் கொடுத்துள்ளார். ரிக், யஜுர், ஸாமம், அதர்வம் என வேதங்கள் நான்கு. அவர் காலத்தில், ரிக் வேதத்தில் 21 பிரிவுகளும், யஜுர் வேதத்தில் 31 பிரிவுகளும், ஸாம வேதத்தில் 1000 பிரிவுகளும், அதர்வ வேதத்தில் 9 பிரிவுகளும் மொத்தத்தில் 1061 பிரிவுகளும் இருந்ததாக அவர் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு வேதத்திலும் பல கிளைகள் உள்ளன. ஒவ்வொரு கிளையிலும் நான்கு பிரிவுகள் உள்ளன. அவை : ஸம்ஹிதை, ப்ராஹ்மனம், ஆரண்யகம், உபநிஷத் என்பன. இப்பொழுது வழக்கத்தில் இருக்கும் பிரிவுகள் ரிக் வேதத்தில் 1, யஜுர் வேதத்தில் 3, ஸாமவேதத்தில் 2, அதர்வ வேதத்தில் 2 ஆகும். இந்த 8 பிரிவுகளைப் பாராயணம் செய்ய, சுமார் 300 மணி நேரம் தேவைப்படுகின்றது. எனவே 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பதஞ்சலி காலத்திலிருந்த வேதங்களைப் பாராயணம் செய்ய 40,000 மணி நேரம் தேவைப்பட்டிருக்கும். இது மிக மிகப்பெரியது. ஒரு மனிதனால் இயற்றப்பட்டிருக்க முடியாது.*

தொடரும்...

# "வேதபாரதி" யின் வளர்ச்சி
# பகுதி - 1 (ஜனவரி 2023)

**"வேதபாரதி"** என்கிறபாரதப்பண்பாட்டு அமைப்பு எந்தவித லாப நோக்கமும் இல்லாமல் சமூகசேவை ஆற்றிவரும் ஒரு அமைப்பு.

இந்த அமைப்பு 2000-ம் ஆவது ஆண்டு முதல் பல பயிலரங்கங்களின் மூலம் இந்து குடும்பங்களில் உள்ள வயது வந்த பெண் குழந்தைகள் மீது அக்கறைகொண்டு, சிறந்த வல்லுனர்களைக் கொண்டு பல பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் **"யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்"** நடத்தி இளம் பெண்களுக்கு ஏற்படும் பல சவால்களை எப்படி எதிர்கொள்வது என்பதற்கான அறிவுரைகளைக் கூறியுள்ளது.

**"ஸந்த்யாவந்தன"** பயிலரங்கங்கள் மூலம் நூற்றுக்கணக்கான ப்ரம்மச்சாரி குழந்தைகள் பயன்பெற்றுள்ளார்கள்.

இதுபோல் இன்னும் பல சமூக சேவைகள் ஆற்றிவரும் இந்த அமைப்பு யாரால், எப்போது, எப்படி உருவாக்கப்பட்டது என்பதையும் தொடர்ந்து வேதபாரதியின் வளர்ச்சி குறித்தும் இந்த மாதம் முதல் இந்த பகுதியில் தொடர்ந்து விளக்கவுள்ளோம்.

இந்த அமைப்பு உருவாக காரண கர்த்தாவாக இருந்தவர் **"பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்"**

ஸ்வாமிகளுக்கு பூர்வாச்ரமத்தில் பெற்றோர்கள் வைத்த பெயர் ஸ்ரீ சங்கரன். அதற்கு ஏற்றால் போல் படித்துப் பேராசிரியராகி தலைசிறந்த ஸ்தாபனமான ஐ.ஐ.டி சென்னையில் பௌதீகத் துறையில் ஆசிரியராக பணியாற்றினார்.

ஒரு கால கட்டத்தில் எல்லாவற்றையும் துறந்து அத்வைத ஸித்தாந்த பாரம்பரியத்தில், ஆதி சங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட சிருங்கேரி சங்கர மடத்தில் 1986-ஆம் ஆண்டு பூஜ்ய ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த ஸ்வாமிகளிடம் ஸந்யாஸ தீக்ஷை பெற்றார்.

ஸ்ரீ ஸ்வாமிஜி எந்த மடத்தையும் சாராமல் – தனக்காக ஒரு மடமோ சிஷ்ய பரம்பரையையோ வைத்துக் கொள்ளாமல் தனியே இயங்கிவந்தார். இவருடைய வழிகாட்டுதலால் நாடெங்கிலும் பல்வேறு ஆன்மிக மாநாடுகள், வேதாந்த முகாம்கள், யக்ஞங்கள் நடந்துள்ளன.

2000ம் ஆவது ஆண்டு சென்னையில் ஸ்வாமிகளின் தலைமையின் கீழ் **“ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம ஜப யக்ஞம்”** நடந்தபோது ஸ்வாமிகளின் தர்சனம் கிடைக்கப்பெற்றறவர்கள் தற்போது வேதபாரதி அமைப்பின் மாநில செயலாளராக இருக்கும் ஸ்ரீ ஆர்.வெங்கட்ராமன் ஜி, கோவையில் வசித்துவந்த ஸ்ரீ சௌம்யா நாராயணன் ஜி, கோவை ஸ்ரீ பசுபதி, ஸ்ரீ முருகநாதன், திருப்பூர் நெடுங்காடி வங்கி ஸ்ரீபாலுஜி ஆகியோர் ஸ்வாமிகளைச் சந்தித்த இவர்கள் திருப்பூரில் ஸ்வாமிகள் சொற்பொழிவு ஆற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். ஸ்வாமிகளும் அதற்கு சம்மதம் தெரிவித்தார்.

நெடுங்காடி ஸ்ரீபாலுவின் முயற்சியால் திருப்பூர் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம மண்டலியின் சார்பாக திருப்பூர் ஐயப்பன் கோவிலில் 2000 ஆம் ஆவது ஆண்டில் ஸ்வாமிகளின் முதல் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடந்தது.

தொடரும்....

## ஔவையார்
# "மூதுரை"

**"மூதுரை"** = *முதுமை + உரை = மூதுரை பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால்* **"மூதுரை"** *என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பாப் பாடல்கள் அமைந்துள்ளன.*

**வெண்பா – 4**

**அட்டாலும் பால் சுவையில் குன்றா(து) அளவளாய்**
**நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்**
**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு**
**சுட்டாலும் வெண்மை தருமே.**

**பொருள் :** *நல்ல பண்பு இல்லாதவர்களிடம் நன்கு பழகினாலும் அவர்கள் நண்பர்களாக மாட்டார்கள். நம்முடைய நிலை தாழ்ந்தாலும் நல்ல பண்புள்ளோர் சிறந்தவர்களாகவே பழகுவார்கள். அவர்களுடைய நட்பு, எவ்வளவு காய்ச்சினாலும் சுவை குன்றாத பாலைப் போன்றது. தீயிலிட்டு சுட்டாலும் மேலும் மேலும் வெளுக்கும் சங்கைப்போன்றது.*

**விளக்கம் :** *பாலை எவ்வளவு நேரம் காய்ச்சினாலும் அதனுடைய சுவை குறையாது. அதேபோல் கடலில் கிடைக்கும் சங்கை நெருப்பில் போட்டு சுட்டாலும் அதன் வெண்மை நிறம் மாறவே மாறாது. அதுபோல் அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்த மேன்மக்கள் தங்களுக்கு எவ்வளவு வறுமை ஏற்பட்டாலும் தங்களுடைய குணத்திலிருந்து மாறமாட்டார்கள். ஆனால் நட்பின் மேன்மையை அறியாத கீழோர் எவ்வளவுதான் நம்முடன் பழகினாலும் நமக்கு உகந்த நண்பனாக ஒரு நாளும் இருக்கமாட்டார்கள்.*

தொகுப்பு : **பரிதி**

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** வேளச்சேரி



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"



There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)



V Krishnamoorthy
Managing Trustee

பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!



**கொடுப்பவர்களுக்குத் தெரியாது, கேட்பது கடவுள் என்று... கேட்பவர்களுக்கு தெரியும், கொடுப்பது கடவுள் என்று...**

அடையாறு கேன்சர் மருத்துவ மனைக்கு வரும் வெளியூர் ஏழை புற்றுநோயாளிகளை அரவணைத்து பாதுகாக்கிறது நமது நம்ம தர்மசாலா. ஏழை புற்றுநோயாளிகள் நம்ம தர்ம சாலாவை தங்களது தாய் வீடாகவே கருதுகிறார்கள். தங்களது இல்லத்தில் இருப்பது போல இங்கும் அவர்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் விரைவில் பூரண நலம் பெறுவோம் என்கிற தன்னம்பிக்கையுடன் இருக்கிறார்கள். ஏழை புற்று நோயாளிகளுக்கு நம்ம தர்மசாலாவில் மூன்று வேளை உணவு பாதுகாப்பான தங்குமிடம் ஆகியவை புற்றுநோயாளிகளின் சிகிச்சை காலம் முழுவதும் **முற்றிலும் இலவசமாக** வழங்கப் படுகிறது. இதன் மூலம் அவர்கள் தடையற்ற சிகிச்சை பெற்று புற்றுநோயிலிருந்து விரைவில் விடுபடுகிறார்கள். **ஏழை புற்று நோயாளிகள் பசியாற உதவி செய்திடுங்கள். உண்மையான இன்பம் இதுவே என்று உணர்ந்திடுங்கள்...**

மாதத்தின் முதல் செலவு சேமிப்பாக இருக்க வேண்டும் என்று பலர் சொல்வார்கள். ஆனால்,

**தன்னுடைய முதல் செலவு தர்மம் செய்வது என்கிறார் திரு. ராகவ் தேவநாதன்**



அவர்கள். ஸ்ரீ மாதா டிரஸ்டிற்கு தொடர்ந்து நன்கொடை வழங்கி வரும் இவரது தந்தை திரு **தேவநாதன்** அவர்களைப் போல் திரு ராகவ் அவர்களும் நம்ம தர்மசாலாவில் தங்கியுள்ள ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு வழங்க, கடந்த சில வருடங்களாக மாதந்தோறும் ரூ.20,000/- நன்கொடை வழங்கி வருகிறார். நமது நிர்வாக அறங்காவலரிடம் "புற்றுநோய் எத்தனை துயரமானது என்பதை நான் அறிவேன். என்னுடைய மாத வருமானம் வங்கியில் கிரெடிட் ஆனதும், முதல் வேலையாக ஸ்ரீ மாதா டிரஸ்டிற்கு எனது நன்கொடையை டிரான்ஸ்பர் செய்து விடுவேன். அச்சமயம் எனக்கு ஏற்படும் மனநிறைவும், மகிழ்ச்சியும் வேறு எதிலும் எனக்கு கிடைப்ப தில்லை" என்று நெகிழ்ச்சியுடன் கூறும் திரு ராகவ் அவர்கள் **"உண்மையான கதாநாயகன்"** என்றால் அது மிகையல்ல.

---

**செங்கல்பட்டு – மாமண்டூரில், நாம் செயல்படுத்த உள்ள ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்ல கட்டிட வரைபட அனுமதி (Building Plan Approval) பெறப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

2023 தை மாதம் கட்டிட பணிகள் துவங்கப்பட்டு 2024 தை மாதம் இம்முதியோர் இல்லம் பயன்பாட்டுக்கு வரும் வகையில் திட்டமிட்டுள் ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். வறுமை-தனிமை -முதுமை இவற்றுடன் போராடும் முதியவர் கள் **சௌகர்யமாகவும் - நிம்மதியாகவும்** தங்கும் வகையில்



சுமார் ஆறு கோடி ரூபாய் செலவில் அமைய உள்ள நமது முதியோர் இல்ல கட்டிட பணிகளுக்கு நன்கொடையாக இதுவரை 2 கோடி ரூபாய் கிடைத்துள்ள நிலையில் மீதமுள்ள தொகையும் இறைவன் அருளால் நல்லவர்களிடமிருந்து நன்கொடையாக குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைத்துவிடும் என்பது எங்களது திடமான நம்பிக்கை. நமது முதியோர் இல்லத்தின் கட்டுமானப் பணிகள் தமிழகத்தின் முன்னணி நிறுவனமான Arun Excello நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. **முற்றிலும் இலவசமாக** செயல்படவிருக்கும் நமது முதியோர் இல்ல கட்டிடப் பணிகளுக்கு ரூ.**5,00,000/-** வழங்கும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரில் இம்முதியோர் இல்லத்தில் முதியோர் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். தாங்கள் விரும்பிய தொகை வழங்குவோரின் பெயர்களும் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும்.

**பெரு நிறுவனங்களுக்கு ஸ்ரீ மாதா டிரஸ்டின் வேண்டுகோள்...**

தங்கள் நிறுவனத்தின் Corporate Social Responsibilty நிதியிலிருந்து ஸ்ரீ மாதா டிரஸ்டின் தர்ம காரியங்களுக்கு நன்கொடை வழங்கிட வேண்டுகிறோம். ஸ்ரீ மாதா டிரஸ்டின் செயல்பாடுகளை நேரில் ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் தங்களது நன்கொடையை வழங்கலாம்.

எங்களது CSR - Registration No.CSR00044074

**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்**

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்
NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act.

Sri Matha Trust PAN No. **AACTS9747G**

நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் "PAN" நம்பரை எங்களுக்கு அனுப்பவும்.

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20. Tel: 044 - 24420727, 42661687
Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647
9500001065 / 9003247857 vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org

## வாழ்த்துகிறோம்





**சென்னை** வேதபாரதி குடும்பத்தைச் சார்ந்த **ஸ்ரீ சங்கரநாராயணன்** புதல்வி **S.G. ரோகிணி** அரசு மருத்துவக்கல்லூரி, விழுப்புரத்தில் மருத்துவம் பயில்வதற்காக இடம் கிடைத்துள்ளது.

**புதுச்சேரி** வேதபாரதி குடும்பத்தைச் சார்ந்த **வெ.நடராஜன் – சுசிலா** தம்பதியரின் குமாரத்தி **N. புஷ்கரா,** புதுவை இந்திராகாந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் பயில்வதற்காக இடம் கிடைத்துள்ளது.

**இந்த இரண்டு மாணவிகளையும் வேதபாரதி மனதார பாராட்டுகிறது.**



## வேதபாரதி புதுச்சேரி

## ஸ்ரீ ராதா மாதவ விவாஹ மஹோத்ஸவம்

**நாள் : 21.01.2023 & 22.01.2023**

**இடம் : ஸ்ரீ ஜெயராம் கல்யாண மண்டபம்,** புதுச்சேரி.

**நடத்துபவர்கள் : கடையநல்லூர் ஸ்ரீ ராஜகோபால் தாஸ் பாகவதர் அவர்கள் குழுவினர்**

வேதபாரதி மேட்ரிமோனி சார்பில் ஜாதகங்கள் திருக்கல்யாணத்தில் வைத்து விஷேச ப்ரார்த்தனை செய்ய உள்ளோம். ஜாதகங்களை பதிவு செய்ய

தொடர்பு எண்கள் : **94431 03404, 98423 54798**

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 24

*மீண்டும் கல்லூரி, படிப்பு என்று எழுதுவதற்கு முன்னர் உங்களை யோசிக்க வைக்க தொடரின் மற்றொரு பாகத்தை எழுதுகிறேன்.*

*இதைப்பற்றியும், என் எண்ணங்களைப் பற்றியும் திரு.வெங்கட்ராமன்ஜி மற்றும் திரு.சூரியநாராயணன் ஜி ஆகியோரிடம் ஒப்புதல் கேட்டேன்.*

*அடுத்த நொடியே, "இதைப்பற்றி நீங்கள் கட்டாயம் எழுதணும், கல்லூரிக்கு செல்வதற்கு முன்பே கல்வி கற்றுக் கொடுப்பவர்களைப் பற்றி புரிதல் பெற்றோர்களுக்கு இருந்தால் தத்தம் குழந்தைகளை வழிநடத்துவது சுலபம்'' என்று இருவரும் பச்சைக்கொடி காட்டினர்.*

*பொதுவாக மாணவப் பருவகாலத்தில், முன்னொரு காலத்தில் ஆசிரியர்களென்றால் அவர்களுடைய பண்புகள், அவருடையப் பணிகள், ஒரு ஆசிரியரென்றால் மிகுந்த பயம், மிக அதிகமான மரியாதை, "நீங்கள் தான் ஆசான்'' என்று அவர்களைப் போற்றிய சமூகம், அவருக்கு நிதி இருக்கிறதா, சௌகரியங்கள் உள்ளனவா என்று எதைப்பற்றியும் யோசிக்காமல், தம் வீட்டுக் குழந்தைகளை (ஆண்) 7 வயதானவுடன், "இவர்தான் உன் குரு, இனி இவர் சொல்படி மட்டுமே கேட்க வேண்டும்'' என்று குழந்தையை "குருகுலத்தில்'' விட்டு, திரும்பிப்*

*பாராமல் சென்றதந்தைகள் கொண்ட நாடு இது.*

*தாய் சிறிது காலம் நினைத்து நினைத்து அழுவாள் அவ்வளவுதான். குருவாக பூஜிக்கும் ஆசான் வழிநடத்துவார் என்று குடும்பமே நிம்மதியாக இருக்கும்.*

*இது ஏதோகட்டுக்கதை, கற்பனையென்று தயவு செய்து நினைக்க வேண்டாம். இதை ஆங்கிலேயர் "மெக்காலே" அழகாக, அலசி ஆராய்ந்து மஹாராணி விக்டோரியாவிற்கு மிக அருமையாக எழுதி, "இந்த சிஸ்டத்தை ஒழித்தால் போதும் இந்தியா நம் கையில்" என்று அனுப்பினான்.*

*இதை நாம் அனைவரும் போற்றும், திரு.கிருஷ்ண ஜகன்நாதன் ஜி, அவர்கள் பேசி கேட்க வேண்டும். நம் மூதாதையர் எவ்விதத்தில் ஏமாந்தார்கள் என்று அறிவது மட்டுமல்ல, இன்றுவரை நம் நாட்டில் மிக உயர்வான இடம் பெற்றிருந்த ஆசான்களான ஆசிரியர்களை எத்தகைய கீழ்நிலைக்கு கொண்டுவந்து தள்ளிவிட்டிருக்கிறோம் என்று உங்களால் உணர முடியும்.*

*இந்த எழுத்தை நான் சரித்திரப் பதிவிற்காக எழுதவில்லை. இந்திய நாட்டில் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றுவரும் தலைமுறையை வழிநடத்திய ஆசிரியர்களின் இன்றைய நிலை என்ன?*

*இன்று பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கு இடையேயுள்ள உறவுமுறைஏற்புடையதாக உள்ளதா?*

*அனைவரையும் சதா ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கு போதிய ஊக்கம் அளிக்கப்படுகிறதா?*

**“உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து”.**

**(அதிகாரம் – 60 குறள் – 596)**

*“உயர்ந்தப் பணிகளுக்கு தான் ஊக்கம் கொள்ள வேண்டும். மற்றகீழான ஆசைகளுக்கு ஊக்கம் வேண்டியதில்லை. ஏனெனில், கீழான எண்ணங்களை விலக்கினாலும், விலக்க முடியாதபடி இயல்பாகவே மனிதப் பிறவியில் உள்ளன” என்கிறார் வள்ளுவர்.*

*உலகிலேயே தாய், தந்தைக்குப் பிறகு ஆசான் (ஆசிரியர்) செய்யும் பணி உயர்ந்த பணி.*

*இதை இன்றைய பெற்றோர்கள் எப்படி பார்க்கின்றார்கள்? இனி அடுத்த மாதம் சந்திக்கலாம்.*

*தொடரும்...*


# வேதபாரதி

மற்றும்

## ஸ்ரீ சங்கரா எஜுகேஷனல் ட்ரஸ்ட்

**இணைந்து வழங்கும்**

# பாவை விழா 2023

**நாள் : 08.01.2023, ஞாயிற்றுக்கிழமை**

**நேரம் : காலை 9.30 மணி**
**முதல் 12.30 மணி வரை**

**இடம் :**

**ஸ்ரீ சங்கர வித்யாலயா வளாகம்,**
வேளச்சேரி மெயின்ரோடு,
சேலையூர், தாம்பரம் கிழக்கு

# கோடி காயத்ரீ ஜப யக்ஞம் 2022

## சென்னை மற்றும் ஊரப்பாக்கம் பகுதிகள்

லோக க்ஷேமத்திற்காக வேதபாரதி அமைப்பின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் ஆசியுடன் நடைபெற்று வரும் கோடி காயத்ரீ ஜப யக்ஞம் ஹோமமமானது பல்வேறு பகுதிகளில் பூர்த்தியாகி வருகிறது. இதன் துவக்க விழா கடந்த ஏப்ரல் மாதம் பூஜ்யஸ்ரீ வித்யா சங்கர ஸ்வாமிகளினால் துவங்கப்பட்டு தற்போது இந்த யக்ஞம் பூர்த்தி ஹோமத்துடன் நிறைவடைந்து வருகிறது. இதன் முதல் நிகழ்ச்சிகளாக திருப்பூர் மற்றும் பாண்டிச்சேரி பகுதிகளில் கடந்த மாதங்களில் நடைபெற்றது.

இதன் தொடக்கமாக கடந்த நவம்பர் 27ந் தேதி ஞாயிறு அன்று சென்னை மற்றும் ஊரப்பாக்கம், கூடுவாஞ்சேரி பகுதிகளில் உள்ளவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியானது ஊரப்பாக்கம் ஸ்ரீ சங்கரா பள்ளியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை வேதபாரதி அமைப்பின் செயலாளர் திரு.வெங்கட்ராமன் ஜி அவர்கள் தலைமையில் பல்வேறு கலந்தாய்வு கூட்டங்களும் Zoom நிகழ்ச்சி வாயிலாகவும், ஆலோசனை கூட்டங்களும் நடைபெற்று விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மற்றும் பலரும் இதில் கலந்து கொண்டு அதற்கான பணிகளை நிறைவேற்றபல்வேறு குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு இந்நிகழ்ச்சியை மிகவும் சிறப்பாக நிறைவேற்றினர்.

விழாவின் துவக்க நாளான 25-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி அளவில் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ காமாட்சி அம்மன் கோயிலில் கணபதி ஹோமத்துடன் காயத்ரீ ஹோமத்திற்கான ஆயத்த பணிகள்

தொடங்கப்பட்டது. அதனை அடுத்து 26-ந் தேதி காலை முதல் ஹோம குண்டங்கள் கட்டும் பணி துவக்கப்பட்டு 31 ஹோம குண்டங்கள் கட்டப்பட்டன. இந்த ஹோம குண்டங்களுக்கு நான்கு வேதங்கள் மற்றும் 27 நட்சத்திர பெயர்களும் சூட்டப்பட்டது. அன்று மாலை வேத பாராயணம் மற்றும் மங்கள வாத்தியத்துடன் ஸ்ரீ காயத்ரீ மாதா அம்மன் விக்ரஹம் அலங்காரம் செய்யப்பட்டு குளோபல் பள்ளிக்கு எடுத்து செல்லப்பட்டு அங்கு அழகிய சிம்மாசனத்தில் அமர செய்து அதற்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதில் வேத பாரதி அமைப்பின் மூலம் வேதம் கற்றுக்கொண்ட வித்தியார்த்திகளின் வேத கோஷங்கள் முழங்கப்பட்டது.

இதில் சிறப்பாக கூறிய வித்தியார்த்திகளுக்கு நினைவு பரிசுகளை இவ்வமைப்பின் குருஜி ஸ்ரீ கைலாஷ கனபாடிகள் அவர்கள் வழங்கினார்கள். இப்பாராயணத்தில் கலந்து கொண்ட அனைத்து வித்தியார்த்திகளுக்கும் ஸ்ரீ சங்கரா பள்ளி நிர்வாகம் சார்பில் தாம்பூல பிரசாதம் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாதுஸ்ரீ பிரேமா கிருஷ்ணமூர்த்தி அவர்களின் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது. இதில் நமது கலாச்சாரம் மற்றும் அனுஷ்டானங்களை முறையாக கடைப்பிடிக்கும் வழிமுறைகளையும் மற்றும் காயத்ரீ மந்திரத்தின் மகிமையையும் தெளிவாக விளக்கினார்கள். இதனைத் தொடர்ந்து ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமம் மற்றும் ஸ்ரீவிஷ்ணு சஹஸ்ரநாமம் மற்றும் பாராயணங்கள் நடைபெற்றன. இதில் 250க்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட அனைத்து பெண் மணிகளுக்கும் மங்கள தாம்பூலத்துடன் பிரசாதம் வழங்கப்பட்டது. அன்று இரவு அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

தொடரும்....

# சாதனைப் பறவைகள்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்

## சிவயோகினிலல்லேஸ்வரி



14ம் நூற்றாண்டு காஷ்மீரத்தில் இஸ்லாமிய மதம் மிக வேகமாகப்பரவிக்கொண்டிருந்த கால கட்டத்தில் உதித்தவர் இன்று நாம் பார்க்கவிருக்கும் சாதனைப் பறவை. பல நூற்றாண்டுகள் கழிந்தும், காஷ்மீரத்தில் பல்வேறு பெயர்களில் இன்றும் அனைவராலும் பேரன்புடன் கொண்டாடப்படும் சிவயோகினிலல்லேஸ்வரி. காஷ்மீரத்தில் ஸ்ரீ நகரத்தில் 1320-ல் இந்து பிராமணகுலத்தில் பிறந்து வளர்ந்தவர். ஜாதி மத பேதமின்றி, இந்துக்களும், இஸ்லாமியர்களும் இவரைத் தங்களின் அதிஷ்ட தேவதையாகவே கொண்டாடினார்கள். இளவயது திருமணம், கணவரின் உதாசீனம், மாமியாரின் தொடர் கொடுமைகள் என்று வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. வீட்டிற்குள் சூழ்நிலை எல்லை மீறிப் போகும் போதெல்லாம் நதிக்கரையில் வந்தமர்ந்து சுழன்று ஓடும் தண்ணீரையே பார்த்துக் கொண்டிருப்பார். இவருக்கு பல பெயர்கள் இருந்தாலும் நாம் “காஷ்மீரிலல்லேஸ்வரி” என்றே குறிப்பிடுவோம்.

இவரிடம் ஏதோ ஒரு ஈர்ப்பு இருமதத்தினர் இடையேயும் இருந்துவந்தது. அந்த ஈர்ப்பு இன்றுவரை தொடர்ந்து கொண்டேயிருப்பதுதான் அதிசயம். இஸ்லாமியர்கள் “லல்லாவும் அல்லாவும்’ ஒன்றேஎன்று

கருதுகின்றனர். இந்துக்கள் “லல்லேஸ்வரியும் பரமேஸ்வரியும்’ ஒன்று என்றே கருதுகின்றனர். காஷ்மீரத்தில் இன்றும் எங்கும் மருத்துவமனைகள், கடைகள், வர்த்தகஸ்தாபனங்கள் “லல்லா” வின் பெரிலேயே இருப்பதைக் காணலாம் என்கிறார்கள். இவரிடம் சில விசித்திர குணங்கள் இருந்தன. சிவயோகினிகளுக்கேயுரியது என்று அன்று புரிந்து கொள்வது சற்று சிரமமாக இருந்திருக்க வேண்டும். அதனால் மிகச் சுலபமான மனம் பேதலித்த கிறுக்குப் பெண்மணி என்றேசித்திரவதை செய்தார்கள். லல்லேஸ்வரி அதற்காக, லவலேசமும் கவலைப்பட்டதாதத் தெரியவில்லை.

காஷ்மீரத்து பிராமணகுலத்தில் பிறந்த பேரழகி, தன் உள்ளார்ந்த ஆத்மஞானத்தேடலின் விளைவாக, தனது வஸ்திரம் உள்பட அனைத்தும் துறந்து, சாலைகளில் அலைந்து திரிந்துள்ளார். மக்கள் பாவம் என்ன செய்வார்கள்? பாமரர்கள், பக்குவமற்றவர்கள், லல்லேஸ்வரியின் மீது கல்லெறிந்து குதூகலித்தார்கள். லலேஸ்வரியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிய அதே சமயத்தில், வாக்கிலிருந்து இறைகவிதைகளும் அருவியாகக்கொட்டின. கண்ணீரோடும் கவிதைகளோடும் நடந்து கொண்டே இருந்தார் லல்லேஸ்வரி. காலம் போக, சாதாரணர்களுக்கும் லல்லேஸ்வரியின் நிஜம் புரியத் தொடங்கியது. இப்பொழுது அவர்கள் பார்வை அவள் உடல் மீது இல்லை. கூர்ந்த கவனம் அவள் வாக்கில் லயிக்க ஆரம்பித்தது.

தொடரும்.......

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

## யானை

யானை என்ற சொல்லைக் கேட்ட உடனே என்ன தோன்றும்? ஆஜானுபாகுவான உருவம், சாம்பல் நிறம், வெண் தந்தங்கள், அசைந்து அசைந்து நடந்து வரும் அழகு, குழந்தைத்தனம் என இவை எல்லாவற்றையும் தாண்டி அதன் முகத்தில் ஓர் சாந்தம் இருப்பது போல தோன்றும். யானையைக் கண்டவுடன் குதூகலம் அடையாத ஆட்களே இல்லை. அதற்கேற்றாற்போல் பிள்ளையாரின் வேழ முகம் நம் அனைவரின் மனதில் ஆழமாக பதிந்து போயிருக்கிறது.

யானைகள் மிகவும் புத்தி கூர்மை வாய்ந்தவை. மனிதர்களின் குரல்களை அடையாளம் அறிந்துகொள்ளும் திறன் யானைகளுக்கு உண்டு. மேலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையேயான குரல் வேறுபாடுகள், மொழிகளுக்கு இடையேயான வேறுபாடுகள் முதலியன யானைகளுக்கு தெரியும். அதன் ஞாபக சக்தி அபாரமானது. மனிதர்கள் இறந்த பிறகு அவர்களது உறவினர்கள் இறுதிச்சடங்குகளை செய்வது வழக்கம். இதுபோலவே யானை கூட்டத்தில் ஏதாவது ஒரு யானை இறந்து விட்டது என்றால் மற்றயானைகள் அந்த யானையின் உடலுக்கு இறுதிச் சடங்குகளைச் செய்யும். இது மட்டுமின்றி சில மகிழ்ச்சியான தருணங்களை யானைகள் சேர்ந்து கொண்டாடவும் செய்கின்றன. மனிதர்களில் சிலர் வலதுகை பழக்கத்தையும், இன்னும் சிலர் இடது கை பழக்கத்தையும் உடையவர்களாக உள்ளனர். இது போலவே யானைகளிலும் சில யானைகள் வலதுகால் பழக்கத்தையும், சில யானைகள் இடது கால் பழக்கத்தையும் உடையவைகளாக உள்ளன. யானை பாகன் அதன் மேல் உட்கார்ந்து இருக்கும் பொழுது,

அந்த உயரத்தையும் கணக்கில் கொண்டு தாழ்வான பகுதிகளில் குனித்து செல்லக் கூடிய அளவு புத்தி கூர்மை கொண்டது.

தமிழில் யானைக்கு ஐம்பதிற்கும் மேற்பட்ட பெயர்கள் இருப்பதாக தெரிகிறது. உதாரணங்களாக வேழம், குஞ்சரம், மதகயம், களபம், கரி என வெவ்வேறு பெயர்கள். தமிழ் இலக்கியங்களில், குறிப்பாக சங்க இலக்கியங்களில் யானையை உவமையாகக் கொண்ட பாடல்கள் ஏராளம்.

புதர் ஒன்றில் தனது கூட்டத்துடன் மேய்ந்து கொண்டிருந்த ஆண் யானை, நீர்நிலை ஒன்றில் பதுங்கியிருந்து புலியை தனது கூரிய தந்தத்தால் குத்தி கொன்று, தந்தத்தில் வழியும் குருதியை கொட்டும் மழை நீரில் கழுவிவிட்டு மலைச்சரிவில் இறங்கி தனது கூட்டத்துடன் சேர்ந்துகொண்டது என்கிறது கபிலர் எழுதிய அகநானூற்றுப் பாடல் ஒன்று

“வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்று எதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழீ நான்”

எனத் தன்னுடைய திருமணக்கனவைப் பற்றி நாச்சியார் திருமொழியில் கூறுகிறார் ஆண்டாள். அதாவது, திருமால், ஆயிரம் யானைகள் சூழ வருகிறார். அக்காட்சியைக் காணும் மக்கள், பாதையின் இரு புறமும் பொற்குடங்களை வைத்து, தோரணங்கள் கட்டி வரவேற்பதாகக் கனவு கண்டதை தன் தோழியிடம் ஆண்டாள் கூறுவதாக அமைகிறது அப்பாடல். வாரணம் என்றால் யானை.

தொடரும்...

**வெ.சிவசங்கரி**



# Dr. ஷ்யாமா — 70

**“வேதபாரதி’’** அமைப்பில் ஒரு அங்கமாக விளங்குபவரும், **“வேதபாரதி செய்திகள்’’** பத்திரிகையில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதிவருபவருமான மதிப்பிற்குரிய Dr.ஷ்யாமா அவர்களின் 70 ஆவது வயதையொட்டி, அவருடைய 40 ஆண்டு பயணத்தை கௌரவிக்கும் வகையில் **“சாவியிலிருந்து சாரதேஸ்வரம் வரை”** என்ற தலைப்பில் சிறப்பு நிகழ்ச்சி, பெண்களின் மாத இதழான **“லேடீஸ் ஸ்பெஷல்”** என்ற பத்திரிகையின் ஆசிரியை திருமதி. கிரிஜா ராகவன் அவர்களால் 19.12.2022 அன்று சென்னை கோட்டூர்புரம் **“தமிழ் இணையக் கல்விகழக கலையரங்கத்தில்’’** நடத்தப்பட்டது.

விழாவில் முக்கிய விருந்தினர்களாக அமுதசுரபி நிறுவனர் கலைமாமணி திருப்பூர் கிருஷ்ணன், கலைமாமணி முனைவர் லேனா தமிழ்வாணன், லேடீஸ் ஸ்பெஷல் பத்திரிகையின் ஆசிரியை ஸ்ரீமதி கிரிஜா ராகவன், எழுத்தாளர் ஸ்ரீ ராணிமைந்தன், விஜயபாரதம் முன்னாள் ஆசிரியர் ஸ்ரீ சுந்தர் ஜோதி, தணிக்கையாளர் ஸ்ரீ சதாசிவம், வாத்சல்யம் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் ஸ்ரீ கௌதமன் ஆகியோர் கலந்த கொண்டு Dr.ஷ்யாமா அவர்களின் தொடர் பணிகளைப் பாராட்டி ஆத்மார்த்த ஆசிகளை வழங்கினார்கள்.

மேஹாலயாவின் முன்னாள் மேதகு ஆளுனர் ஸ்ரீ ஷண்முகநாதன் அவர்கள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தார்கள். இந்த விழாவில் வேதபாரதியின் சார்பில் **“வேதபாரதி செய்திகள்”** ஆசிரியர் ஸ்ரீ வெங்கட்ராமன், மூத்த நிர்வாகி ஸ்ரீ சூரியநாராயணன், வேதபாரதியின் பொறுப்பாளர் ஸ்ரீ ரகுநாதன் மற்றும் புதுவை வேதபாரதியின் உறுப்பினர்கள் ஸ்ரீ NJL ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள்.

காஞ்சி மஹா ஸ்வாமிகள் அனுக்ரஹம் எப்போதும்
Dr.ஷ்யாமா அவர்களுக்கு துணைநிற்கும்.

**ஆசிரியர்**

# தருவின் நிழலில்

## பூவரசு - தெஸ்பீசியா

அனைத்துலகத்திலும் உள்ள மக்களுக்கெல்லாம் அரசன் ராஜா என்றால், பூமியில் உள்ள அனைத்து மரங்களுக்கும் இதுவே ராஜா. எனவே, இதனை "பூவரசு'' அதாவது புவிக்கு அரசு என்றழைக்கப்படுகிறது.

இம்மரத்தின் இலையும் அரசனைப் போன்ற இதய வடிவினில் காணப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் வளர்க்கப்பட வேண்டிய மரம். அமைதியாகவும், நலமுடனும் வாழ்வதற்கு நாம் வசிப்பதற்காக கட்டப்படும் வீடுகளின் நிலைப்படி இம்மரத்தில்தான் செய்யப்பட வேண்டும். இம்மரம் எளிதாக கிடைக்கும் பட்சத்தில் வீடுகளின் கதவுகள், சாளரங்கள், அலமாரி, கட்டில் போன்ற நம் வாழ்வோடு இணைந்துள்ள பொருட்கள் பயன்பாட்டிற்கும் செய்து கொண்டால் நலம் தரும்.

கரியமில வாயுவை அதிகம் உறிஞ்சுவதோடு அதைவிட அதிகளவில் பிராண வாயுவை (ஆக்ஸிஜன்) வெளியிடும் தன்மை கொண்டது. இதன் காரணமாக, கபிலை ஏற்றத்தில் நீர் இறைக்கும்போது மாடுகள் சோர்ந்து போகாமல் இருப்பதற்கு பூவரசு மரங்கள் கிணற்று மேட்டில் அதிகளவு அடியுர தழைச்சத்திற்காக நடவு வயல்களில் இட்டு அதிகளவு மகசூலும் கிடைக்கப் பெறுகின்றனர்.

ஒரு வட்டம் எனப்படும் கால அளவையின் அறுபது தமிழ் ஆண்டுகளில் இம்மரம் "சௌம்ய'' ஆண்டிற்கான மரமாகும், இருபத்தேழு நட்சத்திரங்களில் கேட்டை நட்சத்திரத்திற்கான மரமாகவும் பூவரசு விளங்குகிறது. தோல்

சம்பந்தப்பட்ட சரும நோய்களை தீர்க்கும் வல்லமை கொண்ட "பூவரசு" ஐம்பெரும் காப்பியங்களான "சிலப்பதிகாரம், மணிமேகலை" போன்றதமிழ் இலக்கிய நூல்களில் இடம்பெற்றுள்ளது.

புயலை தாங்கி நிற்கும் தன்மையுடைய பூவரசு, சாய்ந்தாலும் அதே நிலையிலேயே தொடர்ந்து வளரும் ஆற்றலுடையது. வறட்சியை தாங்கி வளரும் இம்மரங்களை நோய்கள் பெரும்பாலும் தாக்குவதில்லை.

மருத்துவ குணம் நிறைந்து காணப்படுவதால் "காயகல்ப மரம்" என்றழைக்கப்படும் பூவரசு, வேறு பெயர்களால் கல்லால், பூப்பருத்தி, புவிராகன், அர்த்தநாரி, ஈவ்ரம், பம்பரக்காய், பூளம் என்றும் விளிக்கப்படுகிறது.

ஸ்தல வ்ருட்சம் : மதுரை அருகே, புதுப்பட்டியில் அருள்பாலிக்கும் அருள்மிகு சடச்சியம்மன் திருக்கோவில் "பூவரசு" ஸ்தல வ்ருட்சமாக அருள்தருகிறது. ஆடி மாதம், சிவராத்திரி, நவராத்திரி ஆகிய காலங்களில் உற்சவம் நடைபெறும் இக்கோவில் சுமார் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இக்கோவிலின் விபூதி பிரசாதம், பாம்பு விஷக்கடிக்கும், தோல் சம்பந்தப்பட்ட வியாதிக்கும் சிறந்த மருந்தாக இன்றைக்கும் மக்கள் உபயோகித்து பயனடைந்து வருகின்றனர்.

மஞ்சளுடன் இக்கோவில் ஸ்தல வ்ருட்ச பூவரசின் 5 இலைகளை அரைத்து பாம்பு கடித்த இடத்தில் பூசி சடச்சியம்மன் கோவில் தீர்த்தத்தில் குளித்து நலம்பெற்று வருகின்றனர்.

தொடரும்...

**ஆதிரையன்**

## வேதபாரதி
## கோடி காயத்ரீ ஜப யக்ஞம் - 2022

*திருச்சியில் 2022 டிசம்பர் மாதம் 17, 18, ஆகிய தேதிகளில் திருச்சி, திருவானைக்காவல் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி வித்யாலயா பள்ளி வளாகத்தில் 20 ஹோம குண்டங்களுடன் மிகச்சிறப்பாக நிறைவு பெற்றது. ஏற்பாடு செய்த திருச்சி வேதபாரதி உறுப்பினர்களுக்கும், பள்ளி நிர்வாகத்திற்கும் நன்கொடையாளர்களுக்கும் வேதபாரதி மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறது. விரிவான கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும்.*

## வேதபாரதி
## புத்தக வெளியீடு விழா

**பெற்றோர்களே கவனியுங்கள் பாகம் - 2**

**நாள் : 08.01.2023, ஞாயிற்றுக்கிழமை**

**நேரம் : காலை 9.30 மணி**

**இடம் : ஸ்ரீ சங்கர வித்யாலயா வளாகம்,**

வேளச்சேரி மெயின்ரோடு, சேலையூர், தாம்பரம் கிழக்கு

**அரங்கத்தில் புத்தகம் வாங்குபவர்களுக்கு சிறப்பு சலுகை வழங்கப்படும்.**

**அனைவரும் வருக, வருக.**

## வேதபாரதி
## தர்மத்தின் குரல் புத்தக கருத்தரங்கம் - 2023

இடம் : சென்னை

நாள் : 26.01.2023, வியாழக்கிழமை

மதியம் 2.00 மணி முதல் 5.00 மணி வரை

**அனைவரும் வருக, வருக.**

மேலும் தொடர்புக்கு : **94434 95950**

உ

திருமண பொருத்தம் இலவசம்

(அனைத்து சமூகத்தினருக்கும்)

வாட்ஸ்அப் மூலம் மட்டும்



பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.

Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS

BK MATRIMONY .com
An Auspicious Beginning ...

தேதியூர். V.J. ராமன்

ஆத்மார்த்த ஜோதிடர்

9003195599
9445230940

## இராமாயணம் வாழ்வியல்

*சென்றமாத தொடர்ச்சி....*

*நாமே நமது குடும்பங்களில் நல்ல காரியங்கள் செய்யலாம் என நினைக்கும் போது நமது குடும்பத்தின் நலனை விரும்புபவர் வந்தால் அதை நல்ல சகுனமாகத்தான் எடுத்துக் கொள்வோம். இங்கு தசரதன் அரசனாக இருந்தபோதும் ஆசனத்தில் இருந்து இறங்கி தானே வாயில்வரை சென்று முனிவரை சகலவித மரியாதையுடன் வரவேற்றார். 'அதிதி தேவோ பவ'' என்பதற்கிணங்க விருந்தினரை வரவேற்பது நமது முக்கியக் கடமை.*

*விஸ்வாமித்திரர் தசரதரிடம் ஆட்சிமுறையைப் பற்றி கேட்கிறார். மக்கள் எந்தவித குறையுமின்றி நிம்மதியாக இருக்கிறார்களா? அறநெறிப்படி ஆட்சி நடக்கிறதா? உனக்கு கருவூலம் நிறைவாக உள்ளதா? என்றெல்லாம் வினவினார். பிறகு முனிவர் மன்னரிடம் "நான் மிகப் பெரிய யாகம் ஒன்று செய்யப்போகிறேன். அதை நடத்தவிடாமல் பல அரக்கர்கள் தொந்தரவு செய்கின்றனர். அதைப் பாதுகாக்க தங்களது மகன் இராமனை என்னுடன் அனுப்பவேண்டும்'' என்று கேட்கிறார். முதலில் மறுத்த தசரதர் வஸிஷ்டர் கூறியதின் பேரில் விஸ்வாமித்திரருடன் இராம லக்ஷ்மணரை அனுப்புகிறார். தான் செய்யும் யாகத்தை காக்கும் திறன் விஸ்வாமித்திரருக்கு இருக்கிறது. தங்கள் மகனை அவர் அழைப்பது அவனது நன்மைக்குத்தான் என்று வஸிஷ்டர் அறிவுறுத்தினார். முனிவர் ஒரு தந்தையைப் போல் குழந்தைகளை அழைத்துச் செல்லுகிறார்.*

*குருவாக இருந்து ராமனுக்கு பலா, அதிபலா மந்திரத்தை உபதேசம் செய்கிறார் விஸ்வாமித்திரர்.*

இவை எதிர்காலத்தில் வனம் செல்லும்போது உபயோகமாக இருந்தது. வஸிஷ்டரிடம் தாங்கள் கற்ற கலைகளை விஸ்வாமித்திரர் முன்பு பிரயோகப் படுத்துகிறார்கள் குழந்தைகள், பெண்களை கொல்லக்கூடாது என்று நியதி இருந்தாலும் தாடகை போன்ற பெண்களை வதம் செய்வது சமூக நலனுக்கு மிகவும் அவசியம் என்று முனிவர் வலியுறுத்துகிறார்.

பிறகு விஸ்வாமித்திரர் கங்கை வரலாற்றை பற்றி கூறுகிறார். பகீரதன் தன் முன்னோர்கள் நற்கதியை அடையவேண்டும் என்ற காரணத்தினால் கங்கையை பூமிக்கு கொண்டு வந்தான். நமது பித்ருக்கள் கரையேறினால்தான் நாம் நிம்மதியாக வளமாக வாழமுடியும் என்பதை இராமாயணம் வலியுறுத்துகிறது. இன்றும் அதே கங்கை நமது பித்ருக்களையும் தொடர்ந்து கரையேற்றிவருகிறாள். விடாமுயற்சி வெற்றி தரும் என்பதற்கு பகீரதன் முன் உதாரணம்.

இராமரின் பாததூளி பட்டு அகல்யை சாபவிமோசனம் பெற்று மீண்டும் பழையநிலையை எய்துகிறாள். எத்துனை பெரிய பாபங்கள் செய்தாலும் அதன்பலனை கண்டிப்பாக அனுபவிக்க வேண்டும். அதிலிருந்து விடுதலை பெற வழியும் உண்டு என்று அகல்யை சாபவிமோசனம் மூலம் தெரிய முடியும். உயர் லக்ஷியத்தை எட்டமுடியும் பரிபூரணமான இறைவனை நோக்கி மனிதன் செல்லவும் முடியும் என்பதைத்தான் இராமாயணம் கூறுகின்றது.

தொடரும்...

**காந்தாமணி நாராயணன்**

# மனம் தரும் தனம்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

**மனம் - தனம் பொருள் விளக்கம் :**

மனம் என்னும் சொல் உள்ளம், நெஞ்சம், முன்னம், கருத்து, நினைவு என்னும் பலபொருள்படும்.

தனம் என்னும் சொல்லின் எழுத்துக்களை இடம்மாற்றி தமன் என அமைத்தால் அச்சொல் குபேரன் எனப் பொருள்படும். இதே போல் மனம் என்னும் சொல்லில் எழுத்துகளை மாற்றி அமைத்தால் மமன் என்னும் சொல்லாகும். அதற்கு அதிர்ஷமுடையவன், யோகக்காரன் என்பது பொருளாகும்.

**வாழ்க்கையின் மையம் :** ஒருவனுடைய மனத்திற்கு விருப்பம் உடையனயாவும், அவனுக்கு இன்பமாகும். வெறுப்புத் தருவன யாவும் துன்பமாகும். எனவே ஒருவனின் இன்ப துன்பத்திற்கு அடிப்படை மனமே ஆகும். மனிதன் என்னும் சொல்லே மனம் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது. வாழ்க்கையின் மையமே மனம் தான்.

ஒருவனுக்குத் தனம் வேண்டுமெனில் மனம் வேண்டும். நல்வினையால் நல்மனம் உண்டாகும். ஒருவனுடைய மனமே அவனை ஆட்டிப் படைக்கும் நிலையாய் உள்ளது. நினைவை உண்டாக்கி, முன் வினைக்குத் தகுந்தபடி சமநிலையில் நின்று உயர்த்தவும், தாழ்த்தவும் காரணமாவது மனமே. இம்மனத்தின் வழியே ஒருவன் தனத்தை அடைய முடியும் என்கிறார் திருவள்ளுவர்.

“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்” - என்று கூறுகிறார்.

‘மனம் போல் வாழ்வு” என்னும் தொடரும் இக்கருத்தையே விளக்குகிறது.

மனம் கொள்ளும் வடிவங்கள் : மனம்தான் எத்தனை வடிவமெடுக்கிறது. கல்மனம், கடினமனம், சொல்மனம், செயல்மனம், கொடுரமனம், கோபமனம், கொலைமனம், கபடமனம், வஞ்சக மனம், வெகுளிமனம், மூடமனம், சோம்பல் மனம், போலிமனம், திகைத்தல் மனம் எனப்பல வடிவெடுத்து ஒருவரது செயலை வேறு வழிக்குத் திருப்பிவிட்டு வேடிக்கை பார்க்கிறது. இதனால்தான் மூதாட்டி ஔவையும்,

‘‘மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்’’ என்று இடித்துச் சொல்கிறாள்.

**அடங்காமனம் :** மனம் நம்கட்டுக்கு எளிதில் அடங்கிவிடாது. நம்மை அலைக்கழிக்கும். எனவே மனத்தை நாம் அடக்கியாளவேண்டும். அப்பர் சுவாமிகள், ‘திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே, மனமாகிய தோணியில், சினமாகிய சரக்கை ஏற்றிக் கொண்டு, அறிவெனும் துப்பினால் தள்ளிக் கொண்டு, நான் பிறவிக்கடலில் செல்லும் போது ஆணவம் எனும் பாறையில் தாக்குண்டு, கடலில் மூழ்கும் போது உன்னை நினைக்கும் உணர்வைத் தருவாயாக’’ என்கிறார். தொடரும்.....

STAR Health Insurance
The Health Insurance Specialist

மருத்துவ பாலிசி உங்களை
செல்வந்தராக்காது
ஆனால்
உங்கள் குடும்பத்தை
கடனாளியாக்காமல் பாதுகாக்கும்!!!





மருந்துவமனை வரவேற்பறையில்
சிறிது நேரம் அமர்ந்து பாருங்கள்
ஏன் மருத்துவ பாலிசி
எடுக்க வேண்டும் என்பதற்கு
பதில் கிடைக்கும்.



S. Narayanan - 9360277372

## புதுவை வேதபாரதியின், "ஸ்ரீ க்ஷேத்ர யாத்திரை"

முக்திக்கு வழிகாட்டும் "ஹரே ராம ஹரே ராம, ராம ராமஹரே ஹரே" – "ஹரேக்ருஷ்ண ஹரே க்ருஷ்ண, க்ருஷ்ண, க்ருஷ்ண ஹரே ஹரே" எனும் மஹா மந்த்ரம் ஜெனித்த ஸ்ரீ க்ஷேத்ரம் எனப்படும் பூரி ஸ்ரீ க்ருஷ்ண க்ஷேத்ரத்தில் 2022, டிசம்பர் 5 முதல் 9 வரை நடைபெற்றநாம சங்கீர்த்தன மேளாவில் புதுச்சேரியின் வேதபாரதி குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

சுமார் நாற்பது பேர் விமானத்தில் ஆகாய மார்க்கமாக பூரிக்கு சென்றடைந்தனர். ஒருவார காலம் நடைபெற்ற திவ்ய நாம சங்கீர்த்தனத்தில் தங்களை இணைத்துக் கொண்டு இறைநாமம் பருகி பரவசித்தனர். தினமும் இரண்டு மணி நேரம் மஹா மந்த்ர வழிகாட்டி "ஸ்ரீ க்ருஷ்ண சைதன்ய மஹா ப்ரபு" அவர்களின் திவ்ய சரித்திரம் உபன்யாசமாக காதுகளில் தேனொழுகச் செய்தார் "கடலூர் ப்ரும்ம ஸ்ரீ முரளி பாகவதர்" அவர்கள்.

கடையநல்லூர் ஸ்ரீ ராஜகோபால்தாஸ் பாகவதர் அவர்களின் "க்ருஷ்ண குடும்பம் சாரிடிபள் ரிலிஜியஸ் ட்ரஸ்ட்" ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மேளாவில் இரண்டாவது நாள் பூரி நகரின் வீதிகள் வழியாக நாம சங்கீர்த்தனம் செய்து திருக்கோவிலை அடைந்து பகவான் "ஜெகந்நாதர்" தரிசனம் செய்தோம். தரிசனம் முடிந்ததும் திருக்கோவில் வளாகத்தில் அமர்ந்து லோக க்ஷேமத்திற்காக ஒருமணி நேரம் பஜனை செய்து பிரார்த்தனை செய்தோம்.

அடுத்த நாள் நகரின் மற்றபகுதிகள் வழியாக நகர சங்கீர்த்தனம் செய்து கொண்டே "ஸ்வர்க்க துவாரம்", "ஹரிதாஸ் ஸ்வாமிகள் மடம் சென்று மஹா மந்த்ர பாராயணம் செய்து மஹா மந்த்ர குரு "ஸ்ரீ க்ருஷ்ண

*சைதன்ய மஹா ப்ரபுவின்'' அதிஷ்டானம் தரிசனம் செய்தோம்.*

*இடையே ஒரு நாள் புவனேஷ்வர் "ஸ்ரீ லிங்கராஜ்'' திருக்கோவில் கோனார்க் "ஸ்ரீ சூர்யனார் திருக்கோவில்'' ஆகிய தரிசனமும் செய்தோம். மேளாவின் கடைசி நாளன்று உறியடி உற்சவம் கண்டு, ஸ்வாமிகளின் சமுத்திர தீர்த்தவாரி தரிசனமும் கண்டு காஞ்சி சங்கர மடத்தின் பூரி கிளையில் ஆச்சார்ய ஸ்வாமிகளின் ஆசியையும் பெற்று மேளாவின் நிகழ்விடத்திற்கு திரும்பினோம்.*

*ஆசியாவின் மிகப்பெரிய சமையலறையான பூரி ஜெகந்நாதர் திருக்கோவிலின் மடப்பள்ளி, பாரம்பரியம் மாறாத விறகு அடுப்பில் ஒன்றன் மீது ஒன்றாக 9 மண் பானைகளில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பதார்த்தங்களை வைத்து சமைக்கும்போது மேலே உள்ள முதல் பானையில் உள்ள பதார்த்தம் முதலில் பக்குவமாய் வேகும் அதிசயம், ஜெகந்நாரின் விமான கோபுரத்தில் தினமும் மாற்றப்படும் கொடி காற்று வீசும் எதிர் திசையில் பறக்கும் அதிசயம், தினமும் இரவு, அன்றைய முறையில் பூஜிக்கும் அர்ச்சகரிடம் ஜெகந்நாதரே சொல்லும் நேரத்திற்கு நடை சாத்துதல் என ஏராளமான அதிசயங்களோடு ப்ரத்யட்சமாக உறையும் ஜெகந்நாதரும், அவரது திருக்கோவிலும் சற்றும் அகலாது கண்களில் நிறைந்திருக்க அவரின் அருளோடு நலமுடன் புதுவை திரும்பினோம்.*

*லோக க்ஷேமத்திற்காக நடைபெற்றநாம சங்கீர்த்தன மேளாவின் நோக்கத்திற்கேற்ப உலக நன்மைவேண்டி உலகையாளும் ஜெகந்நாதரை நாங்களும் பிரார்த்திக்கிறோம்.*

*பிரார்த்தனைகளுடன் பூரி க்ஷேத்ர யாத்திரை குழு...*

*- சுபமஸ்து -*

**- ஆதிரையன்**

Find Your Partner



Best of Luck

Brahmin Kalyanam.com

BK MATRIMONY.com

An Auspicious Begining...

(Exclusive Portal for Brahmins)

பிராமணர்களுக்கு மட்டும்

REGISTER FREE & GET

Brides / Grooms Profiles +
Free Horoscope Matching + ONE YEAR Validity
Membership Fee Rs. 1000 Only.

Astro Guidance By:
**Thethiyur V J Raman**
Aathmartha Jothidar

89397 02500

brahminkalyanam.com@gmail.com

The NEW LIFE CHARITABLE TRUST

தி நியூ லைஃப் சாரிடபிள் டிரஸ்ட்
எண் 31/50, "சாய் பார்க்", பெரியாழ்வார் தெரு, சுந்தரம் காலனி,
கிழக்கு தாம்பரம், சென்னை 600059. போன் : 98841 71172/80562 44435
http://www.newlifecharitabletrust.org





# ஆநிரைகளை பராமரிப்பது ஆண்டவனுக்கு செய்யும் சேவை



ஒவ்வொரு நாளும் வயதான மற்றும் நோய்வாய்ப்பட்ட மாடுகள் கைவிடப்பட்டு அவை பிளாஸ்டிக், காகிதம் போன்றவைகளை உண்டு வேதனையான வாழ்க்கை வாழ்கின்றன.

மனிதர்களுக்கு பால் கொடுத்து வந்த புனிதமான பசுக்கள் இப்படி துன்பத்துக்கு ஆளாகலாமா?

நியூ லைஃப் சாரிடபிள் டிரஸ்ட் (NLCT) இது போன்ற நிராதரவான பசுக்களை மீட்டு எங்கள் **லக்ஷ்மி நிவாஸ்** கோசாலையில் பாதுகாத்து பராமரித்து வருகிறோம்.

தற்போது எங்களிடம் 95 பசுக்கள் உள்ளன.

கோசாலையிலிருந்து பால் அருகில் இருக்கும் வேத பாடசாலை மற்றும் கிராம குழந்தைகள், பெரியவர்களுக்கு கொடுக்கிறோம், விற்பனை செய்வதில்லை.

கோசாலை பராமரிப்பிற்கு 5 ஆண்கள், 2 மகளிர், தீவனம், மருத்துவ செலவுகள் மற்றும் இதர செலவுகள் நன்கொடை மூலமாக கிடைக்கின்றன. கோசாலை பராமரிப்பிற்கு உங்கள் ஆதரவை வேண்டுகின்றோம்.

நன்கொடையை கீழ்கண்ட
வங்கி கணக்கிற்கு
காசோலையாகவோ, ஆன்லைன்
மூலமாகவோ செலுத்தலாம்.

**City union bank**
East Tambaram Branch,
Chennai -600059
SB Account No: 500101010797410
IFSC Code: CIUB0000431

Scan the QR Code
to make payment
thro Google Pay

அனைத்து நன்கொடைகளுக்கும் 80G கீழ் வரி விலக்கு உண்டு.
FCRA ஆல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தொடர்பு - திருமதி. தீபகலா : +91 98841 71172, 044 - 22399551, 43574464
+91 98841 71172 Office@newlifecharitabletrust.org

எங்கள் கோசாலாவிற்கு வருமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CUB கீ செயின் டெபிட் கார்டினை
பரிந்துரைத்து ஊக்க
வெகுமதியை பெறுங்கள்
₹150*
வரை
எவ்வாறு செயல்படுகிறது
STEP 1
நெட்பேங்கிங் மற்றும் மொபைல் பேங்கிங் வாயிலாக கீ செயின் டெபிட் கார்ட் வேண்டி விண்ணப்பிக்கவும்
STEP 2
விண்ணப்பிக்கும் போது பரிந்துரைத்தவரின் மொபைல் எண்ணை பதிவு செய்யவும்
STEP 3
கீ செயின் டெபிட் கார்டு டெலிவரி செய்யும் பொது பரிந்துரைத்தவர் மற்றும் பரிந்துரைக்கபட்டவருக்கு ரூ.50
STEP 4
பரிந்துரைக்கபட்டவருக்கு மேலும் ரூ.50 (ஆக்டிவேஷன் செய்து முதல் பரிவர்த்தனை செய்த பின்)
CUB நெட் பேங்கிங், மொபைல் பேங்கிங் மற்றும் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவும்
Scan QR Code to Apply
*T&C Apply
RuPay
ON-THE-GO
If you are not an existing CUB Customer, Now you can open Savings & Current account instantly through VIDEO KYC
Simply give a missed call to
+91 88866 10805
(or)
Scan the QR Code
CUB
TRUST AND EXCELLENCE SINCE 1904
சிட்டி யூனியன் பேங்க்
www.cityunionbank.com
ராசியான பேங்க், ஈஸியான பேங்க்
Internet/Mobile Banking | Sovereign Gold Bonds | Chat Bot | Cardless Withdrawal | Fastag | Spend Analyzer | Debit and Credit Card | Prepaid/Travel Card | PoS | Social Media Banking | UPI QR Code for Merchants | Online Mutual Fund | Video KYC Online ASBA | WhatsApp Banking Insta Loan | Wallet | Set Card Limit | Green Pin
For Assistance, call our 24x7 Customer Care : 044 7122 5000

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th January 2023




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

____________________

____________________

____________________

____________________

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.